# October 4, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தென் அமெரிக்க நாடான பிரேஸிலில் அதிபர் தேர்தலுக்கான வாக்குப்பதிவு ஞாயிற்றுக்கிழமை (அக். 4) நடைபெறுகிறது.

(i) அதிபர் பதவிக்கு 12 வேட்பாளர்கள் போட்டியிட்டாலும், தற்போதைய அதிபரான லூலா டாசில்வா மற்றும் முன்னாள் அதிபர் ஜெய்ர் போல்சனாரோவின் மகன் செனட்டர் ஃபிளாவியோ போல்சனாரோ ஆகிய இருவருக்கு இடையேதான் கடும் போட்டி நிலவுகிறது.

(ii) அதேநேரம், எந்த வேட்பாளரும் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறாவிட்டால், முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் வேட்பாளர்களுக்கு இடையே அக். 25-இல் 2-ஆம் கட்ட தேர்தல் நடைபெறும்.

(iii) 80 வயதான லூலா டாசில்வா, தனது 7-ஆவது அதிபர் தேர்தலில் போட்டியிடுகிறார். ஊழல் குற்றச்சாட்டுகளில் முன்பு சிறைசென்ற அவர், பின்னர் விடுவிக்கப்பட்டு 2022-இல் மீண்டும் அதிபரானார். மறுபுறம், 45 வயதான ஃபிளா வியோ போல் சனாரோ தனது முதல் அதிபர் தேர்தலில் போட்டியிடுகிறார்.

(iv) இத்தேர்தலில் அதிபர் மட்டுமின்றி, மத்திய மற்றும் மாநிலப் பிரதிநிதிகள், ஆளுநர்கள் மற்றும் சில செனட்டர்களும் தேர்ந்தெடுக்கப் படவுள்ளனர். 16 கோடிக்கும் அதிகமான வாக்காளர்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யவுள்ளனர்.

(v) வாக்களிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ள பிரேஸிலில், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மூலம் தேர்தல் நடைபெறுகிறது.

1990-களில் மோசடிகளைத் தடுக்க அறிமுகப்படுத்தப்பட்ட இந்த வாக்குப்பதிவு இயந்திரங்கள் மூலம், தேர்தல் முடிவுகள் சில மணிநேரங்களிலேயே அறிவிக்கப்படும்.

2. ரஷியாவின் மறைமுகத் தாக்குதல் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில், 'நேட்டோ' உறுப்பு நாடான லாத்வியாவில் புதிய 100 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்குப் பதிவு நடைபெற்றது.

(ii) கடந்த மே மாதம் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தைத் தொடர்ந்து இடைக்காலப் பிரதமரான உக்ரைன் ஆதரவாளர் ஆண்ட்ரிஸ் குல்பெர்க்ஸ், தனது ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள மக்களின் ஆதரவைக் கோரி இத்தேர்தலை எதிர் கொள்கிறார்.

3. ஆசியப் போட்டி ஆடவர் ஹாக்கியில் மலேசியாவை 5-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அசத்தல் வெற்றியுடன் இந்தியா தங்கம் வென்றது. இதன் மூலம் 2028 லாஸ் ஏஞ்சலீஸ் ஒலிம்பிக் போட்டிக்கும் நேரடி தகுதி பெற்றது.

4. ஆசியப் போட்டி கோல்ஃப்பில் இந்தியாவின் பிரணவி அர்ஸ் தனிநபர் பிரிவில் முதன்முறையாக தங்கம் வென்று வரலாறு படைத்தார். மேலும் இந்தியா அணிகள் பிரிவில் வெள்ளி வெல்லவும் உதவினார்.

(i) 23 வயதான பிரணவி அர்ஸ் தனிநபர் ஸ்ட்ரோக் பிளே பிரிவில் 72-ஆவது துளையில் 15 அண்டர் பார் பிரிவில் சிறப்பாக செயல்பட்டார். மேலும் தொடர்ந்து அதிதி அசோக், தீக்ஷா டாகர் ஆகியோருடன் இணைந்து அணிகள் பிரிவில் 14 அன்டர் பார் பிரிவில் வெள்ளி வென்றார். சீனா தங்கம் வென்றது. மகளிர் கோல்ஃபில் இந்தியா இதன் மூலம் அசத்தல் வெற்றியை ஈட்டியது.

(ii) ஆடவர் மல்யுத்தம் 57 ஆகிலோ பிரிவில் இறுதிச் சுற்றில் நடப்பு உலக வடகொரியாவின் சாம்பியன் ஹேன் சோங் சாங்கை 11-7 என்ற புள்ளிக் கணக்கில் வீழ்த்தி தங்கம் வென்றார் அமன் செஹ் ராவத்.

5. ஆசியப் போட்டி ஆடவர் டி20 கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தானை 19 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றது இந்தியா. ஏற்கெனவே மகளிர் பிரிவில் இந்தியா தங்கம் வென்றிருந்தது.

6. அஸ்ஸாமி, வங்கம், பாலி, மராத்தி, பிராகிருதம் ஆகிய 5 செம்மொழிகள் தொடர்பான படிப்புகளுக்காக திறன்மிகு மையங்களை அமைக்க மத்திய கல்வி அமைச்சகம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

(i) இது தொடர்பாக வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ ஆணையில், தேஜ்பூர் பல்கலைக்கழகம் (அஸ்ஸாமி), விஸ்வ பாரதி பல்கலைக்கழகம் (வங்க மொழி), ஒடிஸா மத்திய பல்கலைக்கழகம் (பாலி), குஜராத் மத்திய பல்கலைக்கழகம் (பிராகிருதம்), புணேயில் உள்ள முதுநிலை படிப்புகளுக்கான டெக்கான் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (மராத்தி) ஆகிய உயர்கல்வி நிலையங்களில் திறன் மிகு மையங்கள் அமைக்கப்பட உள்ளன. இந்த 5 மையங்களின் மூலம் மேற்கண்ட செம்மொழிகள் தொடர்பான கல்வி ஆராய்ச்சி, எண்மமயமாக்கம், பாதுகாப்பு, பாரம்பரிய மேம்பாடு ஆகியவை வலுப்பெறும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. தேஜஸ் போர் விமானத் திட்டத் தாமதம் விமான உற்பத்தியைப் பாதிக்கிறது

(i) விமானப்படைத் தளபதியின் எச்சரிக்கை மற்றும் விமானங்கள் சேர்க்கும் இலக்கு

- தேஜஸ் போர் விமானங்களை இந்திய விமானப்படையில் சேர்ப்பதில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் தாமதம், இந்தியாவின் பாதுகாப்புச் சவால்களை எதிர்கொள்ளும் திறனை கடுமையாகப் பாதித்து வருவதாக விமானப்படைத் தளபதி ஏர் சீஃப் மார்ஷல் அமர் பிரீத் சிங் தெரிவித்துள்ளார்.
- செயல்பாட்டுத் திறனைத் தொடர்ந்து பராமரிக்க, அடுத்த சில ஆண்டுகளில் ஆண்டுதோறும் 36 முதல் 40 போர் விமானங்களை இந்திய விமானப்படையில் சேர்க்க வேண்டியுள்ளது.
- அக்டோபர் 8-ஆம் தேதி நடைபெறவுள்ள இந்திய விமானப்படை தினத்தை

முன்னிட்டு நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஏர் சீஃப் மார்ஷல் ஏ.பி. சிங் இந்தக் கருத்துகளைத் தெரிவித்தார்.

(ii) போர் விமானப் படைப்பிரிவுகளின் எண்ணிக்கை குறைவு மற்றும் கொள்முதல் ஒப்பந்தங்கள்

- இந்திய விமானப்படையின் செயல்பாட்டில் உள்ள போர் விமானப் படைப்பிரிவுகளின் எண்ணிக்கை 42-லிருந்து 29 ஆக குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது.
- 2021 பிப்ரவரியில், 83 தேஜஸ் Mk-1A போர் விமானங்களை கொள்முதல் செய்வதற்காக மத்திய அரசு, ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) நிறுவனத்துடன் ₹48,000 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- விமானங்களின் விநியோகம் 2024 மார்ச் மாதத்தில் தொடங்க வேண்டியிருந்த நிலையில், இதுவரை ஒரு விமானம்கூட இந்திய விமானப்படைக்கு வழங்கப்படவில்லை.
- மேலும், 97 இலகுரக தேஜஸ் Mk-1A போர் விமானங்களை கொள்முதல் செய்வதற்காக மத்திய அரசு HAL நிறுவனத்துடன் ₹62,370 கோடி மதிப்பிலான கூடுதல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

(iii) வெளிநாட்டு கொள்முதல், ரஃபேல் ஒப்பந்தம் மற்றும் வெளிநாட்டு நாடுகளின் முன்வரைவுகள்

- இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில், 114 ரஃபேல் போர் விமானங்களை பிரான்ஸிடமிருந்து கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.
- பிரான்ஸுடனான பல்நோக்கு போர் விமானங்கள் (MRFA – Multi-Role Fighter Aircraft) ஒப்பந்தம் நடப்பு நிதியாண்டிற்குள் கையெழுத்தாகும் என நம்புவதாக ஏர் சீஃப் மார்ஷல் சிங் தெரிவித்துள்ளார்.
- ரஷ்யா தனது Su-57 போர் விமானங்களை வழங்க முன்வந்துள்ளது. எனினும், இதுகுறித்து இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.
- உள்நாட்டு போர் விமான உற்பத்தியில் தாமதம் தொடர்ந்து நீடித்தால், இந்தியா வெளிநாடுகளில் இருந்து போர் விமானங்களை இறக்குமதி செய்வதைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்படும்.

(iv) எதிர்கால போர் விமானத் திட்டங்கள் மற்றும் பாதுகாப்புப் படைகளின் ஒருங்கிணைப்பு

- தேஜஸ் Mk-2 போர் விமானங்கள், மேம்பட்ட நடுத்தர போர் விமானத் திட்டத்தின் (AMCA – Advanced Medium Combat Aircraft) கீழ் கொள்முதல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளன.

2019-ஆம் ஆண்டு, ராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆகிய மூன்று பாதுகாப்புப் படைகளையும் ஒரே கூட்டு கட்டமைப்பின் கீழ் கொண்டுவரும் வகையில் ஒருங்கிணைந்த தியேட்டர் கமாண்ட் (Unified Theatre Command)

அமைப்பதை மத்திய அரசு அறிவித்தது. இதுகுறித்த இறுதி முடிவுகளை மத்திய அரசே மேற்கொள்ளும்.